# கடைசி வார்த்தைகள்

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

இலையுதிர்காலமோ குளிர்காலமோ கூட, அது ஒரு பொருட்டல்ல, பாம்புகள் இன்னும் அவனுடைய கல்லறையிலிருந்து ஊர்ந்து சென்றவண்ணம் இருக்கிறது: ஒரு ஞாபகச் சின்னம்!



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: காலத்தால் பரீட்சிக்கப்பட்ட தேவனுடைய ஞாபகச் சின்னங்கள், 57-0818

45. இப்பொழுது, ஒரு ஞாபகச் சின்னம் என்பது ஒருஒரு மகத்தான காரியமாகும். நாம் ஞாபகச் சின்னங்களைப் பாராட்டுகிறோம். இந்த ஜீவியத்தில், அநேக மனிதர்கள், ஏதோவொரு விதமான ஞாபகச் சின்னத்தை தங்களுக்கு பின்னே விட்டுப்போக முயற்சித்திருக்கிறார்கள். ஏறக்குறைய எல்லா மனிதருமே அதைச் செய்ய விரும்புகிறார்கள். தங்களுடைய கல்லறையில் (graveyard) ஒரு மகத்தான அடையாளச் சின்னத்தை வைக்கிறார்கள். அதெல்லாம் சரிதான். நிச்சயமாக. நான் அதைப் பாராட்டுகிறேன். அது-அது சரிதான். பிறகு அநேகர் மகத்தான தேவாலயங்களை கட்ட முயற்சிக்கிறார்கள்.

46. நான் இப்பொழுது குறிப்பிட விரும்பும் ஒரு ஞாபகச் சின்னம் எதுவென்றால், அது ஓஹியோவில் உள்ளது, அங்கே ஒரு கடவுள் நம்பிக்கையற்ற நாஸ்திகன் இருந்தான்.

அவனுடைய பெயரை மறந்து விட்டேன். ஏதோவொரு இடத்தில் என்னிடம் அந்தப் படம் உள்ளது, நான் அங்கே வீட்டில் சேகரித்து வைத்திருக்கும் ஏதோவொரு இடத்தில் அது உள்ளது. அவன் தன்னுடைய மரணத்துக்குப் பிறகு, தன்னுடைய காலை வேதாகமத்தின் மேல்வைத்து, *அந்த* விதமாக கீழே சுட்டிக்காட்டி, "மத மூடநம்பிக்கைகளுக்கு அப்பால், நவீன விஞ்ஞானத்தோடு மேலே" என்று கூறும்படியுள்ள ஒரு ஞாபகச் சின்னத்தை தனக்கு கட்ட விரும்பும் அளவுக்கு, அவன் கிறிஸ்தவத்துக்கு விரோதமாக மிகவும் உறுதியாக இருந்தான். அவன் மரித்துக் கொண்டிருந்த போது, "நான் தவறாக இருந்திருப்பேன் என்றால், பாம்புகள் என்னுடைய கல்லறையை விட்டு வெளியே ஊர்ந்து செல்லும்" என்றான். அவன் மரித்தபோது, அவர்கள் இன்னுமாக அந்தக் கல்லறைக்குள் மண்வாரியைக் கொண்டு மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கையில், அவர்கள் இரண்டு அல்லது மூன்று பெரிய விரியன் பாம்புகளைக் கொன்று போட்டார்கள்.

இன்று, சமீபத்தில் ஒரு ஊழியக்காரர் அந்தக் கல்லறைத் தோட்டத்தில், ஒரு புகைப்படத்தை எடுத்து, என்னிடம் காண்பிக்கும்படி கொண்டு வந்தார், நிறைய உள்ள அவருடைய... ஐச் சுற்றிலும் சங்கிலிகளின் மேல் தொங்கவிட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கல்லறைபூமி (graveyard) ஒரு அழகான இடமாகத்தான் இருக்கிறது, ஆனால் அவனுடைய மண்மேடோ ஒரு பாம்பின் மண்மேடாக இருக்கிறதே அல்லாமல் வேறு எதுவாகவும் இருக்கவில்லை. இலையுதிர்காலமோ குளிர்காலமோ கூட, அது ஒரு பொருட்டல்ல, பாம்புகள் இன்னும் அவனுடைய கல்லறையிலிருந்து ஊர்ந்து சென்றவண்ணம் இருக்கிறது: ஒரு ஞாபகச் சின்னம்! அதைப்போன்ற ஒரு ஞாபகச் சின்னத்தை நான் எப்பொழுதாவது கொண்டிருக்க, அல்லது உங்களில் யாராவது எப்பொழுதாவது கொண்டிருக்க தேவன் அனுமதிக்கவே மாட்டார்.

எனவே அங்கே ஞாபகச் சின்னங்கள் இருக்கின்றன, ஆயினும், மகத்தான ஞாபகச் சின்னங்கள் தான்.

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**

**ஜனங்கள், “தேவன் பேரில் எனக்கு விசுவாசமில்லை” என்று கூறக் கேட்டிருக்கிறேன். ஒருமுறை அவர்களுக்கு துன்பம் உண்டாகட்டும், அவர்கள் முதலாவது கூப்பிடுவது அவரையே**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-01 இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல்

262. அவர்களை அவர் அறிந்திருந்தார், ஆனால் கவனியுங்கள், அவர்களை அவர் கடிந்து கொள்ளவில்லை. அவர்களுடன் கூட அவர் சென்றார். இப்பொழுதும் அவர் அதையே செய்கிறார். அவர்களுடன் கூட அவர் சென்று, அவர்கள் அவருக்கு விரோதமான காரியங்களைச் செய்தபோதிலும், அவர்கள் மேல் தம் இரக்கம் பாராட்டுகிறார் (அது உண்மை). ஏன்? ஏனெனில் அவர்களை அவர் நேசிக்கிறார். அவர்களுடன் அவர் சென்றார். அவசர நேரத்தில் அவர்கள் அவரை நோக்கிக் கூப்பிட ஆயத்தமாயுள்ளனர். அப்பொழுது அவர் தேவைப்படுகிறார்... கூச்சலிடும் ஒருவரை அவர்கள் கேலி செய்வார்கள். தெய்வீக சுகமளித்தலைக் குறித்து பிரசங்கிக்கும் ஒருவரை அவர்கள்

கேலி செய்து, அதில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்று சொல்வார்கள். அவர்கள் இன்னும் போதிய அளவுக்கு வியாதிப்படவில்லை. அப்படிப்பட்ட அநேகரை நான் கண்டிருக்கிறேன்.

263. ஒரு ஸ்திரீ மரணத் தருவாயி லிருந்தாள், நான் படிக்கட்டுகளில் ஓடி ஏறினேன். நான் இங்கு பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, அங்குள்ள கதவண் டையில் ஒரு மனிதன் நின்று கொண்டு என்னை அழைத்தார். அவள் வெளியே நடந்து சென்றுவிட்டாள். அவள் இந்த தெருவில் வசித்து வந்தாள். அவளுக்கு ஒரு பசு இருந்தது. அவள், 'பில்லி கடைபிடிக்கும் அவ்விதமான மார்க்கத்தை என் பசு கடைப்பிடித்தால், அதை நான் கொன்று போடுவேன்'' என்றாள். அதை கூறின பிறகு ஒரு மணி நேரத்துக்குள் அவள் வியாதிப்பட்டு மருத்துவமனைக் குக் கொண்டு செல்லப்பட்டாள் - அழகான இளம் பெண். நான் அங்கு விரைவாகச்

சென்றேன். அவளுடைய கணவர் கத்தோலிக்கர். அவர்கள் என்னை ஆள னுப்பி அழைத்திருந்தனர். அவள் மரித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் வீங்கி விட்டன. அவள், ''அவரைக் கூப்பிடுங்கள், அவரைக் கூப்பிடுங்கள்; அவரைக் கூப்பிடுங்கள்; அவரை வேக மாக, வேகமாக கூப்பிடுங்கள்'' என்றாள்.

264. அவளுடைய சகோதரன் ஓடி வந்து கதவண்டையில் நின்று கொண்டு, காத்திருந்து, காத்திருந்து, எனக்கு சைகை காட்டிக் கொண்டிருந்தார். இந்த இடம் ஜனங்களால் நிறைந்திருந்தது. சற்று கழிந்து யாரோ ஒருவர் வந்து ஒரு குறிப்பை மேசையின் மேல் வைத்தார். "மருத்துவ மனையில் ஒருத்தி மரித்துக் கொண்டிருக் கிறாள்'' என்று எழுதப்பட்டிருந்தது. அது சகோ.க்ரிம் ஸ்நெல்லிங் என்று நினைக் கிறேன். அவரிடம், ''நான் திரும்பி வரும் வரைக்கும் என் இடத்தை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றேன். அவர் பாடலை

தொடங்கி நடத்துவதற்காக அங்கு நின்று கொண்டிருந்தார். அந்த சமயத்தில் பிரசங்கிக்க அவர் அழைக்கப்படவில்லை. அவர் பாடலை தொடங்கி நடத்துவதற்காக வந்து கொண்டிருந்தார். நான் வெளியே சென்று, காரில் ஏறி, விரைவாக ஓட்டிச் சென்று அங்கு அடைந்தேன். நான் படிக்கட்டுகளில் ஏறிச் சென்று கொண் டிருந்த போது அவள் தன்னுடைய கடைசி மூச்சை விட்டாள். அவளுடைய குடல் களும், சிறுநீரகங்களும் இயங்கிக் கொண் டிருந்தன. அவர்கள் அவள் முகத்தை மூடிவிட்டனர். நீராவி அப்படி வந்துக் கொண்டிருந்தது. அங்கு நின்று கொண்டிருந்த வயோதிப நர்ஸ், "சகோ. பிரன்ஹாமே, அவள் உங்களுக்காக அவளின் கடைசி மூச்சைவிட்டாள் என்றாள். அவள் அதை நேராக்க முயன் றாள், ஆனால் அப்பொழுது மிகவும் காலதாமதமாகி விட்டது. ஒரே சமயத்தில் நீங்கள் அநேக பாவங்களைச் செய்யக்

கூடும். அவள் ஒரு விதமான... அவளு டைய முகத்தில் ஆழமாக...

265. அவளுக்கு பொன் நிறமுள்ள தலைமயிர் இருந்தது - மிகவும் அழகான பெண். கத்தரிக்கப்பட்டிருந்த அவளுடைய தலைமயிர் கலைந்து புதரைப் போல் காணப்பட்டது. அவளுடைய பெரிய பழுப்பு நிறகண்கள் வெளியே தள்ளப் பட்டு பாதி மூடியிருந்தன. அவளுடைய முகத்தில் காணப்பட்ட சுருக்கங்கள், அவள் அதிகமான வேதனைபட்டதன் காரணமாக, அவளுடைய முகம் முழுவதிலும் சிறு வீக்கங்கள் போல் எழுந்து நின்றன. அவளுடைய வாய் திறந்திருந்தது. நான் அவளிடம் நடந்து சென்று அவளை உற்று நோக்கினேன். அவளுடைய கணவன் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர், ''பில்லி, நான் ஒரு கத்தோலிக்கன், அவள் பாவ விமோசன ஸ்தலத்துக்கு (purgatory)

சென்றிருப்பதால், அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்'' என்றார்.

நான் “ என்ன? ” என்றேன்.

266. ''அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள். அவள் பாவ விமோசன ஸ்தலத்தை அடைந்திருக்கிறாள். இரண்டு மணி நேரத்துக்கு முன்பு அவள் உம்முடைய சபையை கடந்து செல்லும் போது, நீர் கொண்டுள்ள அவ்விதமான மார்க்கத்தை எங்கள் பசு கொண்டிருந்தால், அதை அவள் கொன்று போடுவாள் என்று கூறினாள். அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்'' என்றார்.

267. நான், “இப்பொழுது காலதாமத மாகி விட்டது. அவள் வேறொரு இடத்துக்குப் போகும்வரை காத்திருக் காமல், இங்கேயே தன் ஆத்துமாவை கழுவி சுத்திகரித்திருக்க (purge) வேண்டும்'' என்றேன். பாருங்கள்? அது உண்மை. ஓ, ஆமாம். நமது துன்ப

நேரத்திலேயே அவரை நாம் தேடுகிறோம். ஜனங்கள், ''தேவன் பேரில் எனக்கு விசுவாசமில்லை'' என்று கூறக் கேட்டிருக்கிறேன். ஒருமுறை அவர்களுக்கு துன்பம் உண்டாகட்டும், அவர்கள் முதலாவது கூப்பிடுவது அவரையே.



அவன், “இப்பொழுது, நான் நித்திரையடையட்டும். கர்த்தர் என்னுடைய ஆத்துமாவைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்” என்றான்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: யூகித்தல், 62-0408

நீங்கள் எங்கிருந்து புறப்பட்டுச் சென்றீர் களோ சரியாக அந்த இடத்திற்கே திரும்பி வர வேண்டியவர்களாயிருக்கிறீர்கள்.

18. சமீபத்தில் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் என்னிடம் இதைக் கூறினார்... அவர் உள்ளே அழைக்கப்பட்டதாக கூறினார்; மார்பில் இவ்விதமாக இயந்திரத் துப்பாக்கியால் சுடப் பட்டிருந்த ஒரு மனிதன் அங்கிருந்தான், அவன் ஒரு இராணுவத் தலைவனாயிருந் தான். மேலும் அவன் மரணத்தருவாயில் படுத்திருந்தான். எனவே இந்தப் பாதிரியார் கூடாரத்தினுள்ளே அவனிடம் அழைக்கப் பட்டார்; அந்த மனிதன் மூச்சு விட முயற்சித்துப் போராடிக் கொண்டிருந்தான். அவர்கள் அவனை யுத்த களத்திற்கு அப்பால் கொண்டு சென்றிருந்தனர். அவர் அவனைப் பார்த்து, "நீ ஒரு கிறிஸ்தவனா?" என்று கேட்டார்.

அவன், “நான் - நான் ஒரு காலத்தில் கிறிஸ்தவனாக இருந்தேன்” என்றான்.

அவர், “நல்லது, நீ தாமதம் பண்ணாமலிருப்பது நல்லது. நீ மரித்துக்கொண்டிருக் கிறாய்” என்றார்.

அவன், “எனக்கு அது தெரியும்” என்றான். (ஏனெனில் இயந்திரத் துப்பாக்கிக் குண்டுகள் ஏதோவொரு விதத்தில் நுரை யீரலைத் துளைத்துச் சென்றிருந்ததாக அவர் என்னிடம் கூறினார். அவன் மரித்துக் கொண் டிருந்ததாகவும், அவனுடைய நுரையீரல்கள் முழுவதும் நிரம்பி, அவனுடைய தொண்டை யில் வழிந்து கொண்டிருப்பதாகவும் கூறினார்.)

மேலும் அவர், “நல்லது, இப்பொழுது, நீ ஒருகாலத்தில் அவரை அறிந்திருந்தாயா?” என்று கேட்டார்.

“ஆம்” என்றான்.

“இப்பொழுது, மிகத் தீவிரமாக யோசித்துப் பார். நீ அவரை எங்கே விட்டாயோ, சரியாக அங்குதான் அவரைக் கண்டுபிடிக்கப்

போகிறாய்: நீ அவரை எங்கு விட்டாயோ அந்த இடத்தில்" என்றார். அது சரியே. அது எவ்வளவு உண்மையாக உள்ளது! நீ சரியாக வார்த்தையில் அவரை விட்டு விட்ட இடத்தில், சரியாக அங்குதான் நீ திரும்பி வர வேண்டும்.

தேவன் கூறுவாரானால்... நீங்கள் - நீங்கள் சபைக்குப் போகிறீர்கள் (அது சரிதான்.), நீங்கள் உங்களுடைய தசமபாகங்களை செலுத்துகிறீர்கள் (அது சரிதான்.), நீங்கள் இந்தச் சபைக்காரியங்களைச் செய்கிறீர்கள் (அது சரிதான்.). ஆனால் அதற்குப்பிறகு, அது பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அவருடைய வார்த்தையில் உள்ள ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கோ இங்கே திரும்பி வரும்போது, நீங்கள் அதை விட்டு அப்பால் நடந்துச் சென்று, "எனக்கு - எனக்கு அதைக்குறித்து தெரியாது" என்று கூறுகிறீர்கள், சரியாக அங்குதான் நீங்கள் அவரை விட்டு விடுகிறீர்கள், சரியாக அங்கேயே. நீங்கள் ஒருபோதும் அதற்கு மேல் போக மாட்டீர்கள். நீங்கள் அவரை

எப்பொழுதாவது மீண்டும் கண்டுபிடித்தால், சரியாக அங்கு தான் திரும்பி வருவீர்கள். நீங்கள் பெரும்பாதையை விட்டு விலகுகி றீர்கள், நீங்கள் பக்கவழியாகச் செல்கிறீர்கள், நீங்கள் மீண்டும் பெரும்பாதைக்குத் திரும்பி வந்து, அங்கே காத்துக்கொண்டிருக்கும் அவரைக் கண்டுபிடித்துக் கொள்ளுங்கள்.

19. இப்பொழுது, அந்தப் பாதிரியார் (chaplain) அவ்விதமாகத்தான் இருந்தார். அவர், "நான் அந்த மனிதனிடம் கூறினேன்" என்றார், "வேகமாக யோசித்துப்பார்" என்றார்.

அவன், "நல்லது, என்னால் யோசித்துப் பார்க்க முடியவில்லை" என்றான்.

அவர், "நீ சிந்தித்துப்பார்ப்பது நல்லது" என்றார். மேலும் (அப்போது), "அந்த இராணுவத் தலைவனுடைய முகத்தில் ஒளி பளிச்சிட்டது, 'எனக்கு ஞாபகம் வருகிறது' என்றான்" என்று கூறினார்.

"சரியாக அங்கேயிருந்து தொடங்கு" என்றார்.

அவன், "இப்பொழுது, நான் நித்திரை யடையட்டும். கர்த்தர் என்னுடைய ஆத்துமா வைக் காத்துக் கொள்ள வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்" என்றான்.

அவன் அவரை எங்கே விட்டான்? தொட்டிலில், அவனுடைய தாயாருடைய முழங்காலில். அங்கேதான் அவன் அவரை மீண்டும் கண்டு கொண்டான். புரிகிறதா? நீங்கள் அவரை விட்டு விட்ட இடத்திற்கு சரியாகத் திரும்பி வர வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்.






சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-21M ஜீவ மார்க்கம்

32. இப்பொழுது, ஜீவனை பெற்றுக் கொள்வதுதான் நாம் சாதிக்கக்கூடிய மிகப்பெரிய காரியமாயிருக்கிறது. ஜீவனைக் காட்டிலும் பெரிதானது வேறொன்றுமில்லை. இந்த காலையில் நான் மகிமைக்கு செல்வேனென்றால், நாமெல்லாரும் அங்கே போவோம், அங்கே நான் ஆபிரகாமை சந்திப்பேன்.

''ஆபிரகாமே, இருப்பதிலேயே மிகப்பெரிய காரியம் என்னவென்று அவரிடத்தில் கேட்பேன்".

அவர், ''ஜீவன்", என்பார். எனவே எப்பேற்பட்ட காரியமானாலும், ஒருவர் சாதிக்க கூடிய மிகப்பெரிய காரியம் அது ஜீவனாயிருக்கிறது. ஜீவனுக்காக நீ என்னத்தை கொடுக்கமுடியும்?

என்னுடைய வீட்டில் நான் ஒரு புத்தகத்தை வைத்திருக்கிறேன். அது சிறைசாலைகளில் ஊழியம் பண்ணுகிற ஊழியர் (சமயகுரு) சகோதரன்.நியுஜென்ட் (Nugent) அவர்கள் எழுதினது என்று நான் விசுவாசிக்கிறேன். கிறிஸ்துவின் காலம் முதல் தொடங்கி பூமியில் மரித்த பெரிய மனிதர்களை குறித்ததான சாட்சிகளை இப்புத்தகத்தில் அவர் கொடுத்திருக்கிறார். இந்த புத்தகம் இன்னொரு பக்கத்தில் மிகவும் துன்மார்க்கமானவர்களையும், ஆவிக்குரிய வாழ்வில் சிறப்பானவர் களையும் குறித்த சாட்சியை கொடுத்திருக் கிறார். அதில் நான் வாசித்து கொண்டிருந்த போது, இங்கிலாந்தின் கொலை வெறி பிடித்த மேரி (Blood Mary) என்று நான் விசுவாசிக்கிறேன், அவள் ''எனக்கு இன்னும் ஐந்து நிமிடங்களுக்கு வாழ்வு (ஜீவன்) கிடைக்குமானால் அதற்காக இந்த இராஜ்ஜியத்தையே கொடுத்து

விடுகிறேன்", என்றாள். அந்த இராஜ்யத்திற்காக அநேகரை அவள் கொன்றாள், இருப்பினும், இன்னும் ஐந்து நிமிட ஜீவனுக்காக அந்த இராஜ்ஜியத்தையே அவள் கொடுக்க விரும்பினாள்.

33.சரியாக இங்கே பால் ராடரின் (Paul Rader) சாட்சியை இன்னும் நான் ஞாபகம் வைத்திருக்கிறேன், அங்கே கூடாரத்தில் அவர் மரித்தபோது அல்லது கூடாரம் இருந்த அவர்களுடைய இடத்தில், அவர் மரித்துக் கொண்டிருந்தபோது தன்னுடைய சகோதரன் லூக்காவை அவர் அழைத்தார். என்னுடைய மகன் பில்லி பாலும், நானும் நெருக்கமாயிருந்தது போல அவர்கள் அவ்வளவு நெருக்கமான நண்பர்களாய் இருந்தார்கள்.

மூடி பள்ளிக்கூடத்தில் (Moody school) மூலம் நான் புரிந்துகொண்டது, அங்கே அவர்களிடத்தில் நான்கு இசைக்கருவி

களுக்கு ஏற்றவாறு அல்லது நான்கு பாடகர் கொண்ட பாடற்குழுவினர் (Quartet) பாடிக் கொண்டிருந்தார்கள்.

பால்(ராடர்) நகைச்சுவை உணர்வு கொண்டவர். அவர்கள் 'என் தேவனே உம்மண்டையில் கிட்டிச் சேர்வேன்",என்று பாடிக் கொண்டிருந்தார்கள். அவர் ''அவர் களை நோக்கி மரித்துக் கொண்டிருப்பது நானா அல்லது நீங்களா? ", என்றார். தொடர்ந்து அவர், ''அந்த திரைகளை உயர்த்தி சில உற்சாகமான சுவிசேஷ பாடல்களை பாடுங்கள்", என்றார். அவர்கள் அந்த பாடற்குழுவினர், 'அங்கே சிலுவையண்டையில்' (Down at the cross) என்ற அப்படிப்பட்டபாடல்களை பாடத் துவங்கினார்கள்.

அவர், ''லூக்கா எங்கே? " என்றார். அப்பொழுது அவர் அடுத்த அறையில் இருந்தார். அவர்கள் அவரை உள்ளே

அழைத்து வந்தனர். அவர், ''லூக்கா இப்பொழுதிலிருந்து இன்னும் ஐந்து நிமிடத்திற்குள் இயேசுகிறிஸ்துவின் சந்நி தானத்தில் அவருடைய நீதியை தரித்தவ னாய் நான் நின்று கொண்டிருப்பேன்", என்றார். நானும் கூட அவ்விதமாய் கடந்து போகட்டும்.

34. டுவைட்மூடி (Dwight Moody), உங்களுக்குத் தெரியுமா அவருடைய சாட்சி என்னவென்று, (மரித்துக் கொண் டிருந்த போது) அவர் எழுந்து,''இது மரணம். இது என் முடிசூட்டும் நாள்", என்றார். அவ்விதமாகத் தான் நான் போக விரும்புகிறேன்.

சற்றே சமீபத்தில் என்னுடைய விலை யேறப்பெற்ற தாயார் கடந்து போகும் போது அவருடைய கரத்தைப் பற்றிப் பிடித்திருந்தேன். என்னுடைய மனைவியும் கடந்து போகும் போதும் அவளுடைய

கரத்தைப் பற்றிப் பிடித்திருக்கிறேன். அவர்கள் சாலையின் முடிவில் வந்தபோது அவர்களை நான் கவனித்திருக்கிறேன். இருப்பதிலேயே மிகவும் பெரிதான காரியம் அது ஜீவனாயிருக்கிறது. நம்பிக் கையில்லாதவர்களுக்கு இதுமுடிவு பெற்ற பின்னர்; அது ஒரு பயங்கரமான காரிய மாயிருக்கும். நாமோ ஜீவ மார்க்கத்தில் நடந்து போய்க்கொண்டிருக்கிறோம்.





# சகோதரன் பாஸ்வர்த்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-0121E – ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம்

2 கர்த்தரோடிருக்கும்படியாகப் பரலோகம் சென்றுள்ள என்னுடைய பண்டைய நண்பர் பண்டிதர் F.F. பாஸ்வர்த் அவர்களை உங்களில் அநேகர் அறிந்திருப்பீர்கள். உங்களில் அநேகர் அவரை அறிந்திருப்பீர்கள். மிகவும் தீரமான ஆத்துமாவைக் கொண்ட அவர் இங்கே பீனிக்ஸீல் என்னோடு ஒருமுறை இருந்தார் என்று நான் நினைக்கிறேன். அவர் ஒரு... ஒரு... ஒரு— ஒரு... அவர் ஒரு பண்டையப் பரிசுத்தமான மனிதராய் இருந்தாலும், அவர் ஒரு நகைச்சுவை உணர்வு கொண்டவராய் இருந்து வந்தார். ஒருமுறை அவர் என்னிடத்தில் சொன்னார், அவரே கூறினார்... நான்

ஐக்கியத்தைக் குறித்து தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர், “சகோதரன் பிரான்ஹாம், ஐக்கியம் என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? ” என்று கேட்டார்.

அதற்கு நான், “நல்லது, சகோதரன் பாஸ்வர்த் அவர்களே, நான் அதை இவ்வண்ணமாய் கருதுகிறேன்” என்றேன்.

3 அப்பொழுது அவர், “அது ஒரு பாய்மரக் கப்பலில் இரண்டு நபர்கள் இருப்பதாகும்” என்றார். ஆகவே அது ஏறக்குறைய சரிதான், அதாவது ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து வாய்ப்பினை பகிர்ந்துகொள்ளுதல்.

4 உங்களில் அநேகர் சகோதரன் பாஸ்வர்த் அவர்களை அறிந்திருப்பதைக் குறித்து உங்களுடைய கரங்களை மேலே உயர்த்தினதை நான் கண்டேன். நீங்கள் அவரை அறிந்திருக்கின்றபடியால், அவர்

இங்கே பூமியின் மேல் இருந்தபோது கூறின அவருடைய கடைசி வார்த்தையைக் குறித்துப் பேச விரும்புகிறேன். நான் அவரை சில காலமாகவே அறிந்திருந்தேன். நான் பிறப்பதற்கு முன்பே, அவர் இங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டும், வியாதியஸ்தருக்காக ஜெபித்துக்கொண்டுமிருந்தார். எனவே அவருக்கு என்ன வயது இருந்திருக்கும் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியும். ஏறக்குறைய எண்பத்தைந்து வயதிலும் கர்த்தர் அவரை ஜீவிக்கும்படி அனுமதித்தார், அவர் மரிக்கும்போது ஒரு தீரமான வயோதிப மனிதராகவே அப்பொழுதும் இருந்தார் என்றே நான் நினைக்கிறேன்.

5 அவருக்கு எழுபத்தைந்து வயதிருக்கும் போது, நானும் அவரும் மியாமி என்ற இடத்தில் உள்ள எட்ஜ்மன்ட் உணவு விடுதியில் இருந்தோம்... என்று நான்

நினைக்கிறேன். அப்பொழுது நாங்கள் எங்களுடைய— எங்களுடைய இரவு உணவினைப் புசித்துவிட்டு, சமுத்திர அலைகள் வருவதையும், சந்திரோதயத்தையும் கவனித்துப்பார்க்கும்படிக்கு கடற்கரைக்கு நடந்து சென்றோம். கிட்டத்தட்ட நாற்பது வயதுடையவனாயும் என் தோள்பட்டைகள் தொங்கினவனாக, அந்த விதமாக நடந்து சென்றேன். ஆனால் அவரோ ஏறக்குறைய எழுபத்தைந்து வயதிலும் அவரால் முடிந்தளவு அவ்வளவு நேராக நிமிர்ந்து நடந்து வந்தார். நான் அவரைப் பார்த்து வியப்புற்றேன். அப்பொழுது நான், "சகோதரன் பாஸ்வர்த் அவர்களே, நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்" என்றேன்.

அதற்கு அவர், "சரி, கேளுங்கள், சகோதரன் பிரான்ஹாம்" என்றார்.

அப்பொழுது நான், “நீங்கள் எப்பொழுது மிகச் சிறப்பாய் இருந்தீர்கள்? ” என்று கேட்டேன்.

6 அப்பொழுது அவர், “இப்பொழுது தான்” என்றார். நல்லது, அப்பொழுது நான் என்னைக் குறித்து வெட்கமடைந்ததை உணர்ந்தேன். அவர், “நான் ஒரு குழந்தையாய் பழைய வீட்டில் வசித்ததை நீங்கள் மறந்துவிட்டீர்கள்” என்று கூறினார், இதை அவர் கூறினார். அது பாஸ்வர்த்தாய் இருந்தது.

7 அவர் கர்த்தரை சந்திக்கும்படியாய் மரித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் கேள்விப்பட்டபோது, நான் என்னுடைய காரிலிருந்த டயர்கள் ஏறக்குறைய தேய் வுற்று கிழிந்தேபோகுமளவிற்கு வேகமாக மியாமி என்ற இடத்திற்கு அவரைக் காணச் சென்றேன். நானும் என்னுடைய மனைவி யும் அங்கு சென்றபோது... பாஸ்வர்த்

அவர்களின் குடும்பத்தினரும், எங்களுடைய குடும்பத்தினரும் மகத்தான நண்பர்களாய் இருந்து வந்திருந்தனர். நாங்கள் உள்ளே சென்றோம். பண்டையக் கோத்திரப் பிதாவோ ஒரு சிறுபடுக்கையில் படுத்துக் கொண்டிருந்தார். அவர் தன்னுடைய சிறிய வழுக்கைத் தலையை உயர்த்தி *இந்தவிதமாக* அவருடைய மெலிந்த கரங்களை என்னை நோக்கி நீட்டினார். அப்பொழுது என்னுடைய கன்னங்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. நான் என்னுடையக் கரங்களில் அவரைப்பற்றிப் பிடித்துக் கொண்டேன். அப்பொழுது நான், “என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே” என்று கதறியழுதேன். காரணம் பெந்தேகோஸ்தேக்களின் கால அசைவில் எப்போதுமே கனமான கௌரவத்தை செலுத்த வேண்டிய ஒரு வயோதிபர் இருந்திருப்

பாரேயானால், அது சகோதரன் பாஸ்வர்த் அவர்களாகத்தான் இருந்தது. அவர் நிச்சயமாக அவ்வாறிருந்தார். அவர் ஒரு மகத்தான மலராய் இருந்தார்.

8 உங்களுக்குத் தெரியுமா? அதாவது அவர் என்னிடத்தில் முதலாவதாகக் கூற விரும்புகிற ஒரு சிறு கேலியானக் காரியத்தை நீங்கள் அறிவீர்களா?

அதாவது நான், "சகோதரன் பாஸ்வர்த் அவர்களே, நீங்கள் சுகமடையப் போகி றீர்களா? " என்று கேட்டேன்.

9 அதற்கு அவர், "இல்லை, சகோதரன் பிரான்ஹாம். நான் துவக்கத்திலிருந்தே சுகவீனமாய் இல்லையே" என்றார். மேலும் அவர், "நான் பரலோக வீட்டிற்கு சென்று கொண்டிருக்கிறேன்" என்றார்.

அப்பொழுது நான், "நல்லது, அது மிக அருமையாயுள்ளது" என்றேன்.

10 அதற்கு சற்று முன்னர்தான் நானும் அவரும் ஆப்பிரிக்க ஊழியக்களத்திலிருந்து வந்திருந்தோம். அவர், "நான் இனியும் நீண்ட காலம் வாழ இயலாத அளவிற்கு மிகவும் வயோதிகனாய் இருக்கிறேன்" என்றார். மேலும் அவர், "நான் பரலோக வீட்டிற்கு சென்று கொண்டிருக்கிறேன்" என்றார்.

அப்பொழுது நான், "சகோதரன் பாஸ்வர்த் அவர்களே, நான் செய்ய வேண்டும் என்று நீங்கள் எனக்கு கூற விரும்பும் அறிவுரை என்ன?" என்று கேட்டேன்.

11 அதற்கு அவர், "சுவிசேஷத்தோடு தரித்திரு" என்றார். மேலும் அவர், "உன்னால் முடிந்தளவு துரிதமாக ஊழியக் களத்திற்கு திரும்பிச் செல்" என்றார். பின்னர், "அதுவே என்னுடைய அறிவுரை" என்றார்.

12 நானோ தொடர்ந்து, “சகோதரன் பாஸ்வர்த் அவர்களே, நான் இன்னுமொரு காரியத்தை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்” என்றேன்.

அதற்கு அவரோ, “சகோதரன் பிரான்ஹாம், அது என்ன?” என்று கேட்டார்.

13 அப்பொழுது நான், “இப்பொழுது நீங்கள் கர்த்தருக்காக ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாக அல்லது அதற்கு மேலாக ஊழியம் செய்திருக்கிறீர்கள்” என்றேன். எனவே நான், “ஜீவியத்திலேயே உங்களுடைய மகிழ்ச்சியான நேரமாயிருந்தது எப்பொழுது?” என்று கேட்டேன்.

அதற்கு அவரோ, “சரியாக இப்பொழுதே” என்றார்.

அப்பொழுது நான், “சகோதரன் பாஸ்வர்த் அவர்களே, நீர் மரித்துக்கொண்

டிருக்கிறீர் என்பதை நீர் அறிவீரா? ” என்று கேட்டேன்.

14 அதற்கு உடனே அவர், “நான் மரிக்க முடியாதே. நான் அநேக ஆண்டு களுக்கு முன்பே மரித்துவிட்டேனே” என்றார். அதற்கு நான்... அவர், “சகோதரன் பிரான்ஹாம், கடந்த அறுபது வருடங்க ளாக நான் நேசித்திருக்கிற, அக்கறை கொண்டிருக்கிற யாவற்றிற்காகவும் எந்த நேரத்திலும் அவர் வந்து வாசலைத் திறந்து, என்னை அழைத்துக் கொண்டு போக காத்துக்கொண்டிருக்கிறேன்” என்றார்.

*வாழ்க்கையின் சங்கீதத்தைக் (The psalm of life)* குறித்து நான் நினைத்துப் பார்க்கிறேன்.

நம்முடைய வாழ்க்கைகளை நாம் விழுமியதாக்க முடியும்,

மேலும் மாள்வுற்று, நமது அடிச்சுவடு களைப் பின்னே,

கால மணல்களின் மேல் விட்டுச் செல்கிறோம் என்பதை

மாமனிதர்களின் வாழ்க்கைகள் அனைத்தும் நமக்கு நினைவூட்டுகின்றன.

அவர் நிச்சயமாகவே அடிச்சுவடுகளை எனக்கு விட்டுச் சென்றார்.

15 அவர் மரிப்பதற்கு முன்னர் இல்லை... மகிமைக்குள்ளாக செல்வதற்கு முன்னர், அவர் மரிப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அல்லது அதற்கு இன்னும் அதிகமான நேரத்திற்கு முன்னர் இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது அவர் ஒரு சில மணி நேரங்களாக ஒருவிதமான உறக்கத்தில் இருந்து வந்தார். அப்பொழுது அவரு டைய மனைவியும், அவருடைய குமாரர் களும், அவருக்கு அன்பானவர்களும் சூழ்ந்து நின்றுகொண்டிருக்க, இந்த

வயோதிப மனிதர் சடுதியாய் எழும்பி, சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, இறங்கி தரையிலே ஓடி, அநேக ஆண்டுகளுக்கு முன்பே மரித்துப் போயிருந்த தன்னு டையத் தாயாரோடும், தன்னுடையத் தகப்பனாரோடும் கரங்களைக் குலுக்கி னார். அவர் ஒரு மணி நேரத்திற்கு மேலாகவே ஜனங்களோடு கரங்களைக் குலுக்கி, "இதுதான் சகோதரன் ஜான். ஆம். நீர் இல்லினாய்ஸ், ஜாலியாட்டில் நடைபெற்ற என்னுடைய கூட்டத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக வந்தீர். இதோ சகோதரன்... " என்று கூறிக்கொண்டு, அநேக ஆண்டுகளுக்கு முன்னரே தன்னால் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு மரித்துப்போயிருந்தவர்களோடு கரங்களைக் குலுக்கிக் கொண்டிருந்தார்.

16 நான்— நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நாம் இப்பூவியிலிருந்து மற்றொன்றிற்குள்ளாக கடந்து செல்லும்

அந்த வேளையில் என்றுதான் நான் நினைக்கிறேன், சில நேரத்தில் நான் நினைக்கிறேன்... அப்பொழுது... எப்படியா யினும் கடக்கப்போகிற ஆறு கடினமான தாயிருக்கப்போவதை நீங்கள் அறிவீர்கள். அப்பொழுது நம்முடைய கர்த்தர் ஒருக்கால் நம்முடைய அன்பார்ந்தவர் களிடத்தில், "ஆற்றண்டை போய், அவர்களை அங்கே கீழே சந்தியுங்கள்" என்று கூறுவார் என நான் நினைக்கிறேன். நாம் என்றோ ஒரு நாளில் நம்முடைய ஜனங்களோடு சேர்க்கப்படுவோம் என்று யாக்கோபு கூறினது போன்றேயாகும்.

17 நானும் கூட அந்த நாள் வருவதற் காகவே எதிர்நோக்கிக் கொண்டிருக்கி றேன். நான் இங்குள்ள இந்த ஜீவியத்தி னூடான முடிவைடையும்போது, அல்லது தேவன் இங்கே என்னை முடிவுறச் செய்கிறபோது, ஒவ்வொரு புதர் நிலத்தி னூடாகவும், ஒவ்வொரு குன்றினூடாகவும்

ஏறிக்கடந்து சென்று என்னால் முடிந்தளவு நான் கைப்பற்றியுள்ள ஒவ்வொரு அரணையும் நான் கண்டு, நான் எங்கே இருந்து வந்திருக்கிறேன் என்பதை நான் திரும்பிப் பார்க்க விரும்புகிறேன். அப்பொழுது நான் ஆற்றண்டை வருவேன்.

18 நான் எப்பொழுதும் கூறியிருக்கிறது போன்றே, இங்குள்ள கருப்பு நிறத்தவர், அவர்கள் பாடுகிற ஒரு சிறு பாடல் ஒன்று உண்டு, அதாவது, "எனக்கு ஆற்றண் டையிலே எந்தத் தொல்லையும் இருக்க வேண்டாம்" என்பதாகும். எனவே நான் அவை எவ்வாவற்றையும் இப்பொழுதே சீர்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

19 நான் பட்டயத்தை திரும்ப உறையிலேப் போட்டு, தலைச் சீராவைக் கழற்றி, அதை கடற்கரையிலே கீழே வைத்துவிட்டு, என்னுடையக் கரங்களை

மேலே உயர்த்தி, “பிதாவே, ஜீவப் படகைக் கொண்டு வாரும். நான் இக்காலையில் பரம வீட்டிற்கு வந்து கொண்டிருக்கிறேன்” என்று கூக்குரலிடுவேனாக. அப்பொழுது அவர் அங்கிருப்பார். கவலைப்படாதீர்கள். நான் அதை விசுவாசிக்கிறேன். நம் ஒவ்வொருவருடைய இருதயத்தின் வாஞ்சையும் அதுதான் என்றே நான் கருதுகிறேன்.



**அவள், "நான் பதற்றமடையவில்லை. நீ மனிதரை வஞ்சிக்கிறவன். நான் இழக்கப்பட்டு நரகத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன், ஏனெனில் நீ எனக்கு அவ்வாறு தான் போதித்தாய்" என்றாள்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 50-08-27A ஊதாரி

என் அன்பான நண்பரே, நீங்கள் இந்த சரீரம் மற்றும் இந்த ஜீவியத்தின் கடைசி மூச்சு காற்றிடத்தில் வரும்போது, அந்த மனிதனால் உண்டாக்கப்பட்ட கோட்பாடு கள் நிலைநிற்க மாட்டாது என்பதை நீங்கள் கண்டுக் கொள்வீர்கள். அந்த காரியங் களைக் கொண்டு ஜீவிப்பது நல்லதுதான், ஆனால் அவைகளைக் கொண்டு நீங்கள் மரிக்க முடியாது...

நான் யூகிக்கிறேன், என்னுடைய இந்த வயதில், இந்த ஊழியத்தில், என் வயதை உடையவர்கள் - மரித்துக் கொண்டிருக் கின்ற அநேக ஜனங்களின் அருகில் நான் அனேகமாக, இருந்திருக்கிறேன், ஏனென் றால் மரித்துக் கொண்டிருக்கிறவர்களுக் காக நான் மிகவும் அதிகமாக அழைக்கப் பட்டிருக்கிறேன்.

13. சில நாட்களுக்கு முன்னர், எங்களுடைய பட்டணத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட வாலிப ஸ்திரீ பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தை பெற்றிருந்தாள். அவள் கூடாரத்திற்கு வருவாள். பட்டணத்திலுள்ள வேறொரு வாலிபப் பெண் மிகவும் பிரபலமானவளாய் இருந்தாள். அவள் (இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தையும், பாதுகாப்பையும் மறுதலித்த, நவீன மாதிரியான மதக்குழுவை சேர்ந்தவர்களாய் இருந்தாள். மேலும் எங்களை, ஒரு வழக்கத்திற்கு மாறான மத நம்பிக்கை உடையவர்கள் என்றும் ஒரு கூட்ட பரிசுத்த உருளைகள் என்றும் கூறினர். ஏனெனில் நாங்கள் கிறிஸ்துவினுடைய இரட்சிக்கும் கிருபையில் விசுவாசம் கொண்டிருந்தோம்.

ஒரு பரிசுத்த உருளையாய் இருப்பதற்கு அதுவே அவசியமாய் இருக்குமானால், பின்பு நான் அவர்களில் ஒருவனாயிருக்கிறேன். (காரணம்) நான் இரத்தத்தில் விசுவாசம் வைத்திருக்கிறேன்.

இந்த வாலிப ஸ்திரீ நடனங்களுக்கும் கேளிக்கைகளுக்கும் போனாள், ஆனால் அவள் சபையில் ஞாயிறு பள்ளி ஆசிரியையாய் இருந்தாள். சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தை மறுதலித்து, அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது என்று கூறினது. அது 1900 வருடங் களுக்கு முன்பே உலர்ந்து போய்விட்டது என்று மேய்ப்பர் சொன்னார்: ஒரு சமூக சுவிசேஷம். போகப் போக இந்த அழகான தோற்றம் கொண்ட சிறு பெண் சில வாலிப பையன்களுடன் வெளியே சென்றாள்.

இந்த மற்ற சிறு பெண்ணோ மேலே கூடாரத்திற்கு வருவாள். அவள் பழைமை நாகரீகமான வஸ்திரங்களை உடுத்தினாள். அவள் தன்னுடைய மயிரை அப்படியே எவ்வளவு முடியுமோ அவ்வளவு இருக்க மாக சீவி, நீங்கள் அழைக்கிற இந்த ஒப்பனை அலங்காரம் எதுவும் அவளு டைய முகத்தில் கொண்டிருக்காமல் அல்லது அவர்கள் உடுத்துகிற

அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் அவள் உடுத்தாமல் தெருவில் இறங்கி செல்வது வழக்கம். அவள் தெருவில் இறங்கி போவாள்.

ஆம், அது உண்மையே; நாம் அதற்கு விரோதமாக போதிக்கிறோம். சுவிசேஷத்திற்கு முக்கிய கவனத்தைக் கொடுக்கும் படிக்கு தேவன் போதகர்களுக்கு உதவி புரிவாராக. சீமாட்டிகளே கவனியுங்கள், ஒரு மனிதனை சந்திக்கும்படி தனக்குத் தானே வர்ணம் தீட்டிக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ எப்பொழுதாவது வேதத்தில் இருப்பாளானால், அது ஒரு ஸ்திரீ மாத்திமே, அதுதான் யேசபேல்; தேவன் அவளை நாய்களுக்கு உணவாக்கினார். எனவே அவர்கள் வர்ணம் தீட்டிக்கொண் டிருப்பதை நீங்கள் காணும்போது, “எப்படி இருக்கிறீர்கள், செல்வி நாய்க் கறியே?” என்று கூறுங்கள். அது மிகவும் சரியே: தேவன் அவளை நாய்களுக்கு

இரையாக்கினார். நீங்கள் அவளைப் போல இருக்க விரும்புவதில்லை.

எவ்வளவு அழகாக இருக்க வேண்டுமோ அவ்வளவு அழகாக தேவன் உங்களுடைய வழிகளிலே உங்களை அழகுள்ளவர்களாக்குவார். ஆனால் இன்னும் நம்முடைய பரிசுத்த சபையானது அப்படிப்பட்டதான காரியங்களை விட்டுக் கொடுக்கிறது. அது உண்மை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் மறுபடியும் உங்களை வெட்டி சரிப்படுத்தும் அந்த பழைய வரிசையில் திரும்பி வந்து, சுவிசேஷத்திற்கு திரும்பி வருவது நல்லது.

14. இப்பொழுது கவனியுங்கள். இந்த வாலிபப்பெண், அவள் அப்படியே தன் ஒவ்வொரு வழியிலும் செய்துக் கொண் டிருந்தாள், நடனங்களுக்கும், விருந்து களுக்கும் மற்றவைகளுக்கும் வெளியே சென்றாள். அவள் வியாதியால் தாக்கப் பட்டாள். காரியம் என்னவென்று அவள்

புரிந்துக் கொள்ளவில்லை. ஆனால் மருத்துவர் அவளிடம் வந்தபோது, அவள் ஒரு பால்வினை நோயை கொண்டிருந் தாள். அவளுடைய நிலைமை மிகவும் மோசமாயிருந்தது. கொஞ்சம் முயற்சித்துப் பார்த்தார்கள், ஆனால் அது கிரியை செய்யவில்லை.

இந்நிலையில் அவள் நேராக பரலோ கத்திற்கு போவாள் என்றும், ஏனெனில் அவள் ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியையாய் இருந்தாள் என்றும் மேய்ப்பர் அவளிடம் கூறினார். எனவே அவர்கள் அனைவரும் அவள் போவதையும், கர்த்தருடைய தூதர்கள் அவளை அழைத்துச் செல்ல வருவதையும் காண அறைக்குள் கூடி வந்திருந்தனர்.

அதற்கு சிறிது நேரத்திற்கு முன்பாக நான் அப்படியே தெருவில் கடந்து சென்றேன். மேய்ப்பர் வீட்டின் கூடத்தில் உட்கார்ந்திருந்தார், அழகான பெரிய வீடு,

அருமையான ஜனங்கள். அவர் அப்பொழுதுதான் அறையை விட்டு வெளியே வந்திருந்தார். ஞாயிறு பள்ளி வகுப்பார் அனைவரும் அவள் பரலோ கத்திற்கு போவதை காணும்படி உள்ளே பாடல்களை பாடிக் கொண்ருந்தனர். மேய்ப்பர் புகைபிடிக்கும்படி நடந்து வெளியே கூடத்திற்கு வந்தார். மரணம் அப்பெண்ணை தாக்கியபோது, அவள் மரண பீதியில் அலறத் தொடங்கினாள், அவள், “அந்த பெண் எங்கே?” என்றாள்.

அவர்கள், “எந்தப் பெண்?” என்றனர். அவள், “உன்னுடைய வகுப்பார் எல்லா ரும் இங்கே உள்ளனரே” என்றாள்.

அவளோ, “நான் அவர்களை குறித்து பேசிக் கொண்டிருக்கவில்லை. என்னு டைய ஆத்துமாவை குறித்து என்னிடம் வழக்கமாக பேசுகிற, அவளுடைய பெயரைச் சொல்லி, அங்கே மேலேயுள்ள அந்த கூடாரத்தைச் சேர்ந்த அந்த

பெண்ணைக் குறித்து தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்” என்றாள். “போய் அவளை அழைத்து வாருங்கள்” என்று சொன்னாள்.

15. அவர்கள் மேய்ப்பரிடம் சென்றனர், அவர் உள்ளே ஓடி வந்தார். அவர், “இப்பொழுது, தேனே கவனி, நாங்கள் மருத்துவரை அழைக்கிறோம். அவர் உனக்கு ஊசி போடுவார். நீ சிறிது பதற்றமடைந்துள்ளாய்” என்றார்.

அவள், “நான் பதற்றமடையவில்லை. நீ மனிதரை வஞ்சிக்கிறவன். நான் இழக்கப்பட்டு நரகத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன், ஏனெனில் நீ எனக்கு அவ்வாறு தான் போதித்தாய்” என்றாள். அந்த பெண் இழக்கப்பட்டவளாய், எது சரியானதென்று அவளிடம் கூற முயற்சித்துக் கொண்டிருந்த மற்ற பெண்ணிற்காக அலறிக் கொண்டே மரித்து, தேவனைச் சந்திக்கச் சென்று விட்டாள்.

பார் சகோதரனே, இந்த வாழ்க்கை பயணத்தின் முடிவிற்கு நீ வரும்போது, நீ தேவனுக்கு முன்பாக ஒரு பரிசுத்தமான, சுத்தமான ஒரு ஜீவியம் ஜீவித்திருக்க வேண்டுமென்று நீ விரும்புவாய். அதை ஞாபகத்தில் வைத்திருப்பதில் நிச்சயமா யிருங்கள்.

இப்பொழுது, உங்களுடைய சபை யைக் குறித்து - நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்களாய் இருந்தாலும், தேவனுக்கு அது காரியமல்ல. உங்களுடைய இருதயத் தில் என்ன இருக்கிறது என்பதுதான் காரியம். அது சரியே. நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்கள் என்று தேவன் உங்களிடம் கேட்கப் போவதில்லை; உங்க ளுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதைத்தான் தேவன் பார்க்கப் போகிறார்.





எனவே அவன், "இப்பொழுது பாருங்கள், தேவன் என்ற அப்படிப்பட்ட காரியமே இல்லை" என்றானாம். ஆனால் மருத்துவமனை அறையில் அவன் மரித்துக் கொண்டிருக்கும்பொழுது, என்ன சம்பவிக்கும் என்று காணும்படியாக அநேகர் அங்கே கூடிவந்திருந்தனராம். அப்பொழுது அவன், "ஓ, தேவனே, என்னுடைய ஆத்துமாவின் மேல் இரக்கமாயிரும்" என்று சத்தமிட்டானாம்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-0405S – போய் என் சீஷர்களுக்குச் சொல்லுங்கள்

15 இப்பொழுது மத்தேயும் 28-ம் அதிகாரத்தில், சரியாகக் கூறினால் 7-ம் வசனம் முதல் நாம் வாசிப்போம்.

*சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்: இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்.*

16 அது ஸ்திரீகளுக்கும், மரியாளுக்கும்... இரண்டு மரியாளுக்கும் கொடுக்கப்பட்ட தூதனுடைய செய்தியாயிருந்தது. அது ஒரு... முதலாவது ஈஸ்டர் காலையன்று ஒலிக்கப்பட்ட மகிமையான செய்தியாயிருந்தது.

17 அவர் இந்தப் பூமியின் மேல் ஜீவித்தபோது, அவர் ஒரு மனிதனைப் போன்று நடந்தார். அவர் ஒரு மனிதனைப் போன்று காணப்பட்டார். அவர் தன்னுடைய எல்லா— ஒரு மனிதனைப் போன்றே தன்னுடைய வெளித்தோற்றத்தை உடையவராய் இருந்தார்; இருந்தபோதிலும், உள்ளாக, அவர் ஒரு மனிதவர்க்கத்தைக் காட்டிலும் மேலானவராக இருந்தார். அவர் இம்மானுவேலாய் இருந்தார். இன்றைய தினம் இதுவரை உலகம் முழுவதிலும் சம்பவித்திராத மகத்தான சம்பவத்தின் ஞாபகார்த்தமாய் இருக்கிறது. கிறிஸ்து இயேசுவாகிய இந்த மனிதனுக்குப் புறம்பாக ஒரு மனிதனும் இருந்ததேயில்லை, அவர், "என் ஜீவனைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" என்றார்.

18 கன்பூஷியஸ், ஆம், முகம்மது மற்றும் புத்தர் மற்றவர்களால் அநேகர் மகத்தான தத்துவஞானிகளாய் இருந்தனர்; ஆனால் அவர்கள் மரித்தபோதோ அது காரியத்தை முடிவுறச் செய்துவிட்டது. அவர்கள் என்றென்றைக்குமாய் முடிவுக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்கள் அவர்களை புதைத்தனர், அது... அது அதை முடித்தது.

19 ஆனால் இந்த மனிதனோ தன் ஜீவனைக் கொடுக்கவும், அதை மீண்டுமாய் எழுப்பவுங்கூடிய ஒரே நபராய் இருந்தார். அதை உடைய ஒரே ஒருவராய் இருந்து, அவரால் அதைச் செய்ய முடிந்தது என்று நிரூபித்திருக்கிறார்.

20 இப்பொழுது, காலங்களினூடாக மனிதனின் பயமாக இருந்து வந்தது மரணமே. இந்த உலகத்திற்குள் வந்த ஒவ்வொரு மனிதனும் எப்பொழுதும்

மரணத்திற்குப் பயந்திருந்தான். மகத்தானவர்கள்... நமக்கு நெப்போலியன்கள் இருந்தனர், நமக்கு ஹிட்லர்கள் இருந்தனர் மற்றும் ஒவ்வொரு காரியமும் இருந்தது; ஆனால் அது மரணத்தின் நேரத்திற்கு வரும்பொழுது, அவர்கள் ஒவ்வொருவரும் சுருங்கிப் போகிறார்கள். மனிதன் பெரிய தேவ தூஷணமான காரியங்களை பெருமையாகப் பேசுகின்றதை நான் கேட்டிருக்கிறேன்; ஆனால் மரணத்தண்டனை வரும்பொழுது, அவர்கள் ஒவ்வொருவருமே சுருங்குகின்றனர்.

21 பாப் இங்கர்சாலைப் (Bob Ingersoll) போல பெரிய புகழ்வாய்ந்த நாத்திகன், அவன் தன்னுடைய கைக்கடிகாரத்தை எடுத்து, அதை அவனுடைய கூட்டத்தாரிடம் பிடித்து, "தேவன் ஒருவர் உண்டென்றால், இந்த கடிகாரத்தின் டிக்

சத்தத்திலிருந்து ஒரு நிமிடத்தில் நான் மரித்துப்போவேன்" என்றானாம். அப்பொழுது அந்த நிமிடம் கடந்த பிறகும், அவர் மரிக்கவே இல்லையாம். உடனே அவன் பெரிதாய், "ஹா, ஹா" என்ற வார்த்தையைக் கூறிவிட்டு, "நீங்கள் பாருங்கள், தேவன் என்ற அப்படிப்பட்ட ஒரு காரியமே இல்லை" என்றானாம். ஆனால்...

22 நிச்சயமாக, அது வேத வார்த்தை நிறைவேறுவதற்காக மாத்திரமே இருந்தது. வேதம், "கடைசிநாட்களில் பரியாசக்காரர்கள் வருவார்கள்" என்று கூறியுள்ளது. நாம் அவர்களை உடையவர்களாயிருக்கிறோம்.

23 எனவே அவன், "இப்பொழுது பாருங்கள், தேவன் என்ற அப்படிப்பட்ட காரியமே இல்லை" என்றானாம். ஆனால் மருத்துவமனை அறையில் அவன் மரித்துக் கொண்டிருக்கும்பொழுது, என்ன

சம்பவிக்கும் என்று காணும்படியாக அநேகர் அங்கே கூடிவந்திருந்தனராம். அப்பொழுது அவன், “ஓ, தேவனே, என்னுடைய ஆத்துமாவின் மேல் இரக்கமாயிரும்” என்று சத்தமிட்டானாம்.

24 என்னுடைய தகப்பனார் ஒரு கீர்த்தி வாய்ந்த நாத்திகனுக்கு நெருங்கிய நண்பனாய் அல்ல, இல்லை... சரியாகக் கூறினால், ஒரு தனிப்பட்ட முறையில் மிகவும் நெருங்கிய நண்பனாய் இருந்தார். அவன், “தேவன் என்ற அப்படிப்பட்டதொரு காரியமே கிடையாது” என்றானாம். அவன் தேவனுடைய கருத்துக்களையே மிகவும் சபித்தானாம். அவனுடைய மனைவியோ ஒற்றைக் குதிரை வண்டியில் சபைக்குச் செல்வாளாம். அவனோ ஞாயிற்றுக் கிழமையில் தன்னுடைய சோள வயலை உழுது, ஒவ்வொரு காரியத்திலும் தேவன் என்ற அப்படியொரு காரியமே இல்லை என்று காட்டும்படி செய்வானாம்.

25 ஒருநாள், அப்பொழுதுதான் அவன் அவனுடைய கோதுமையை விதைத்திருந்தானாம். அதுவோ முழுவதும் நாசமாய் போயிற்று; மின்னல்கள் அதைத் தாக்கி அதை எரித்துப் போட்டது. அவன் அங்கே வெளியே சென்று, தன்னுடைய கரங்களை உயர்த்தி, உண்மையான தேவனுடைய கருத்துக்களை சபித்தான். அவன் அதை செய்தபோது, அப்பொழுதே மின்னல் அவனுடைய களஞ்சியத்தைத் தாக்கியது. அவன் அங்கே சில அருமையான பந்தய குதிரைகளை வைத்திருந்தான், மின்னல் ஒவ்வொன்றையும் கொன்று போட்டது.

26 அதற்கு சில வாரங்கள் கழித்து அவன் நச்சுக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, என்னுடைய தகப்பனார் படுக்கையில் அவனுக்கு உதவியாக தாங்கிப் பிடிக்கையிலே மரித்துப் போனான். பிசாசுகள் அவனைச் சுற்றிலுமாய் சங்கிலிகளால் சுற்றி அவனைப்

பின்தொடர்ந்து வந்து கொண்டிருப்பதாகவும் மற்றும் ஒவ்வொரு காரியத்திற்கும் அவன் கூச்சலிட்டுக் கதறினான். அவன் மரிக்கும்படியான நேரம் வந்தபோது, அவன் அவனுடைய குடும்பத்தை ஒன்று கூட்டி அவனுடைய சிறு பிள்ளைகளை அழைத்தான். அவன் அவர்களிடத்தில், "உங்களுடைய தகப்பனார் சென்ற பாதையில் நீங்கள் செல்லாதீர்கள். உங்கள் தாயார் போகின்ற பாதையிலே செல்லுங்கள், ஏனென்றால் அது மாத்திரமே ஜீவ வழியாய் இருக்கிறது" என்றானாம்.

27 நான் வீட்டிலே ஒரு புத்தகம் வைத்திருக்கிறேன், அது அநேக பெயர்பெற்ற மனிதர்களின் சாட்சியைக் கொண்டது. அப்படிப்பட்ட மகத்தான... இங்கிலாந்தின் மகத்தான ராணிகளில் ஒருவள் மற்றும் சில மற்ற சில மனிதர்களுடையதையும் கொண்டுள்ளது. அவர்கள் மரணத்திற்குள்ளாக காலடி

எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது அவர்கள் அலறினர், அழுதனர்.

28 இங்கிலாந்தின் ராணி எலிசபெத், “நான் மட்டும்... தேவனோடு என்னுடைய இருதயத்தை சரிப்படுத்த, என்னுடைய மனந்திரும்புதலை நான் செய்திருக்கும்படியாக நான் இன்னும் ஐந்து நிமிடங்கள் அதிகமாக ஜீவித்திருந்தால், நான் என்னுடைய இராஜ்யத்தையே கொடுத்திருப்பேன்” என்றாள்.

29 மற்றொரு மகத்தான பெயர்போன மனிதன், “நான் இருளுக்குள் காலடியை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் எங்கே போய்க் கொண்டிருக்கிறேன் என்பதை நான் அறியேன். நான் முடிந்தால்... ” என்றான்.

30 மற்றொரு மகத்தான் நாத்திகன் கூறினானாம், அவன், “அங்கே இரண்டு மதில் சுவர்கள் இருப்பது போன்று காணப்படுகின்றது, நான் அலறினேன்,”

என்றும், “வெறுமனே ஒரு மதிலிலிருந்து இன்னொரு மதிலுக்கு எதிரொலி கேட்டது” என்றான். அவர்கள் கேட்க முடிந்ததெல்லாம் அவ்வளவு தான். அது அதிக காலதாமதமாகுமட்டாய் இரட்சிப்பின் நாளை அவன் தள்ளிப் போட்டிருந்தான்.

31 பின்னர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலும், அவருடைய உயிர்த்தெழுதலிலும் விசுவாசமுள்ள மரித்துப்போன மகத்தான பெயர் பெற்ற மனிதர்களைக் குறித்து நான் நினைக்கிறேன், இங்கே நான் டி. எல். மூடி (D.L. Moody) தன்னுடைய மரணத்திலே, அதைக் குறித்து அதிகமாக சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். “ஏன்? இது மரணமா? ”. அவர், “இது என்னுடைய முடிசூட்டும் நாளாக உள்ளது” என்றாராம். ஜான் வெஸ்லி, அவர் மரித்துக்

கொண்டிருக்கும்பொழுது என்றே நான் கருதுகிறேன். ஆபிரகாம் லிங்கன் சுடப்பட்டு மரணத்துக் கேதுவாக இரத்தம் வழிந்துகொண்டு ஒரு இடத்தில் கிடந்தபோதோ.

32 அண்மையில் அங்கே இல்லினாய்ஸில் (Illinois) உள்ள ஒரு அருங்காட்சி சாலையின் பக்கமாக நான் நடந்து சென்றேன். அவருடைய தலையில் வளையம் போன்று சிறிது வெள்ளை முடியுடன் ஒரு வயதான கறுத்த மனிதன் எதையோ பார்த்துக் கொண்டே சுற்றி நடந்து கொண்டிருந்ததை நான் கண்டேன். கொஞ்ச நேரம் கழித்து அவர் நின்றார். கண்ணீர் அவர் கண்களில் வழிந்தது. அவர் அப்படியே பின்னிட்டு வந்து ஜெபம் செய்யத் துவங்கினார். நான் அவரை ஒரு சில நிமிடங்களாகக் கவனித்தேன். நானும் கூட சுற்றி நடந்து கொண்டிருந்தேன், எனவே நான் நடந்து சென்று,

"பெரியவரே, என்ன சங்கதி? நீர் ஜெபித்துக் கொண்டிருப்பதை நான் கவனிக்கிறேன்" என்றேன்.

அவரோ, "அங்கே கிடப்பதைப் பாரும்" என்றார்.

33 நல்லது, அங்கே கிடக்கின்றதை நான் நோக்கிப் பார்த்தேன், நான் காண முடிந்த ஒரே காரியம் ஒரு ஆடையாய் இருந்தது, அவர் சொன்னார்... நான், "நான் காண்கிற ஒரே காரியம் ஒரு ஆடையாய் உள்ளது" என்றேன்.

34 அவர், "ஆனால்," "ஐயா, பாருங்கள்," என்னுடைய சட்டைக்கு அடியில் ஒரு அடிமைப்பட்டையின் தழும்பு இருக்கிறது என்று கூறினார். அவர், "அதுதான் ஆபிரகாம் லிங்கனின் இரத்தம்" என்றார். மேலும், "அந்த அடிமைப் பட்டையை என்னிலிருந்து எடுத்துப்போட அது ஆபிரகம் லிங்கனின் இரத்தத்தை எடுத்துக் கொண்டது" என்றார்.

35 நான், "அந்த ஆபிரகாம் லிங்கனின் இரத்தத்தின் நிமித்தமாக, ஒரு அடிமைப்பட்டையை அது எடுத்துப் போட்ட காரணத்தினால் அது ஒரு கறுத்த மனிதரை எழுச்சியாகக் கூடுமானால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் ஒரு விசுவாசிக்கு என்ன செய்தாக வேண்டும். நாம் கல்வாரியை திரும்பிப் பார்த்து, அவர் நம்முடைய பாவத்தின் கச்சையை நம்முடைய இருதயங்களிலிருந்து எடுத்துப் போட்டு, நம்மை விடுவித்ததை காணும்போது அது நமக்கு என்ன செய்தாக வேண்டும்" என்றே எண்ணினேன். அதாவது கடந்த சில இரவுகளாக நாம் அதை குறித்துதான் பேசிக் கொண்டிருந்தோம். அது என்ன ஒரு வித்தியாசமாக உள்ளது!

36 ஆபிரகாம் லிங்கன், அவர் மரித்துக் கொண்டிருக்கும் போது, அவர் ஒரு முடிவுக்குள்ளானவராக இருந்தார். அவர்... ஆனால் அவர் அங்கே

சுடப்பட்டபோது, இந்த பெரிய முக்கிய தேவாலயத்திலே, அவர் தன்னுடைய படுக்கையில் மரித்துக் கொண்டிருக்கையில், அவர், “சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கிற பக்கத்தை நோக்கியவாறு என் முகத்தை திருப்புங்கள்” என்றார். சூரியன் மாலையில் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. லிங்கன் சுவாசித்துக் கொண்டிருந்த போதே, அவருடைய நுரையீரல்களில் இரத்தம் கொப்பளித்துக் கொண்டிருந்தது. அவர் எப்பொழுதுமே தேவனை நம்பியிருந்தார். அவர், “என் கரங்களை உயர்த்திப் பிடியுங்கள்” என்றார். அவர் தன்னுடைய கரத்தை உயர்த்திப் பிடித்தார். அவர், “பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரித்தப்படுவதாக” என்று கூறியவாறு அவருடைய தலையை சாய்த்து தன்னுடைய ஆவியை விட்டார்.

37 என்னுடைய நெருங்கிய நண்பர் பால் ரேடார் (Paul Radar) அவர்கள் என்னுடைய தலைப்பு பாடலான *நம்பிடுவாய்* என்ற பாடலை எழுதியவர்; அவர் மரித்துக் கொண்டிருக்கும்போது, அவர் தன்னுடைய தோளை சாய்த்திருக்க அவருடைய தலை என்னுடைய மேலாளர் திரு.பாக்ஸ்டர் (Baxter) அவர்களின் மேல் சாய்ந்திருந்தது. அவர் கடல்களையும், சமுத்திரங்களையும் எல்லாவற்றையும் கடந்து பயணம் செய்த ஒரு மகத்தான தீரமுள்ள மனிதனாய் இருந்தவர். அவர் எங்கோ அடிப்படைவாதிகளோடு கலப்பாகி அவருடைய செய்தியே அவரை மரணத்திற்கேதுவாக கவலைக்குள்ளாக்கியது. அவர் மரித்துக் கொண்டிருக்கும்போது, அவர் ஒரு அறையில் கிடந்தார். மரணத்திற்கு சமீபமாயிருந்தார், முடிவுக்காக போராடிக் கொண்டிருந்தார்.

38 இங்குதான் ஒரு மனிதனின் உண்மையான வெற்றி உள்ளது. அவர் எப்பொழுதுமே ஒரு மகத்தான நகைச்சுவையாளராகவே இருந்தார். உங்களில் அநேகர் பால் (Paul) அவர்களை அறிந்துள்ளீர்கள். சிறு மூடி வேதாகமப் பள்ளியிலிருந்து வந்த நால்வர் பாடற்குழுவினர் அங்கே இருந்தனர். அவர் மரித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் எல்லா ஜன்னல்களின் திரைகளையும் இழுத்து மூடிவிட்டார்கள். அவர் மேலே எழுந்து நோக்கிப் பார்த்தார். அவர் தன்னுடைய தலையை அசைத்து, அவர், "யார் மரித்துக்கொண்டிருக்கிறது? நீங்களா அல்லது நானா?" என்று கூறி, "திரைகளை உயர்த்துங்கள், எனக்கு சில நல்ல, அருமையான உயிர்த்தெழுதலைப் பற்றின சுவிசேஷப் பாடல்களைப் பாடுங்கள்" என்றார்.

39 அவர்கள் அந்த விதமாக பாடத் துவங்கியதும், அவர், "என்னுடைய சகோதரன் லூக்கா எங்கே? " என்றார்.

40 அவருடைய சகோதரனை அழைத்து வந்தனர். என்னுடைய மகன் என்னோடு செய்கிறது போலவே அவரோடு சென்றது லூக்காதான். லூக்கா பக்கத்து அறையில் இருந்து அழுதுகொண்டு இருந்தார். லூக்கா உள்ளே வந்தார்; ஒரு மகத்தான பெரிய அகலமான தோள்களையுடைய மனிதன் ஒருவேளை நீங்கள் அவரை அறிந்திருக்கலாம். அவரும், மா சண்டே (Ma Sunday) யும் அவர்கள் எல்லோரும் அங்கே இருந்தனர்.

41 அவர் அப்படியே சுற்றித் திரும்பினபோது, அவர் லூக்காவை கரத்தினால் பற்றிப்பிடித்து, "லூக்கா நாம் இருவருமாக சேர்ந்து நீண்டதூரம் வந்திருக்கிறோம். ஆனால் அதைக் குறித்து சிந்தித்துப் பார், இப்பொழுதிலிருந்து ஐந்து

நிமிடங்களில், நான் இயேசு கிறிஸ்துவின் சமூகத்தில் அவருடைய நீதியை உடுத்திக் கொண்டு நின்று கொண்டிருப்பேன்" என்றார்.

நம்முடைய வாழ்க்கைகளை நாம் விழுமியதாக்க முடியும்,

மேலும் மாள்வுற்று, நமது அடிச்சுவடுகளைப் பின்னே

கால மணல்களின் மேல் விட்டுச் செல்கிறோம் என்பதை

மாமனிதர்களின் வாழ்க்கைகள் அனைத்தும் நமக்கு நினைவூட்டுகின்றன;

ஒருவேளை வெறொருவன் வாழ்க்கையினுடைய

பெருமிதமான ஆழ்கடலின் மேல் பயணம் செய்கையில்,

ஒரு கைவிடப்பட்ட, கப்பற் சேதமடைந்த சகோதரன்,

அடிச்சுவடுகளைக் கண்டு, மீண்டும் மன தேறுதலடைவான்.

42 லாங்ஃபெலோ (Longfellow) என்ற ஆங்கிலப்புலவன், *வாழ்க்கையின் சங்கீதத்தைக்* குறித்து, அவர்தான் அதை எழுதினார் என்று நான் நினைக்கிறேன். சில மாதங்களுக்கு முன்னர் அவருடைய கல்லறையின் அருகே நான் நின்றேன். நான் அவருடைய மகத்தான செய்யுளைக் குறித்தும், அவர் உலகத்திற்கு என்ன கொடுத்தார் என்றும் நினைத்துப் பார்த்தேன். அந்த *வாழ்க்கையின் சங்கீதம்* என்னுடைய பாராட்டுகளில் ஒன்றாயிருக்கிறது. மரணம் எப்பொழுதுமே ஒரு பயமாக இருந்தது. ஆதியிலிருந்தே மனிதன் முழுமையாய் அதற்குப் பயந்தான். முற்கால ஏதேன் தோட்டம் முதற்கொண்டே மனிதன் மரணத்திற்கு பயந்திருந்தான்.

43 மகத்தான தீர்க்கதரிசியாகிய யோபுவைக் குறித்து நான் நினைக்கையில், அந்த நேரத்தில் அவன் அங்கே அமர்ந்திருந்தபோது, அவன் மரித்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறிந்திருந்தான். அங்கே அவன் அந்த மகத்தான செய்தியை கூறினான். அதாவது நாம் அதை யோபு 14-ல் இருந்து பார்க்கலாம். எப்படியாய் அவன் பூக்களைக் கவனித்தான்; அவைகள் எப்படி மரித்து, அவைகள் மீண்டும் எழுகின்றன. அவன் மரங்களை எப்படியாய் கவனித்தான்; எப்படியாய் அது காற்றினால் அலைக்கழிக்கப்படுகிறது, காற்றானது அதை கிழித்துப் போடுகிறது. காற்றினால் கீழே தள்ளப்படுகிறது. அவன், “மரணத்தில் இவை நடக்கிறது, இருந்தபோதிலும் அது மீண்டுமாய் ஜீவிக்கிறது” என்றான். அவன், “ஒரு சில துளி தண்ணீரினால், ஆம்” என்று உரைத்து “அது ஜீவிக்கிறது” என்று கூறுகிறான். நாம்

நம்முடைய மிருகங்களை கவனிக்கிறோம், அவைகள் ஜீவித்து மரிக்கின்றன. அசைந்து கொண்டிருக்கிற எந்தக் காரியமும் அது மரிக்கும்போது, அது மீண்டுமாய் ஒருபோதும் ஜீவிப்பதில்லை.

44 எனவே எப்படி தேவனால் ஒரு பூவை எடுத்து அதை மறுபடியும் ஜீவிக்கச் செய்ய முடிகிறது. இருந்தபோதிலும் அவனால் மீண்டுமாய் ஜீவிக்கமுடியவில்லையே என்று யோபு வியந்தான். அவன், "ஆம், மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரன் ஜீவித்துப் போனபின் அவன் எங்கே?" என்றான். அவன், "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்" என்றான். பின்னர் அவன், "ஓ, நீர் என்னை பாதாளத்தில் ஒளித்து உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து வைத்தால் நலமாயிருக்கும். நீர் எனக்கு காலங்களையும், கட்டுகளையும் குறிக்கிறீர்,

என்னால் கடந்து செல்ல முடியாது. ஆனால் உம்முடைய கோபம் தீருமட்டும் நீர் என்னை ஒரு மறைவிடத்தில் ஒளித்து வைத்தால் நலமாயிருக்கும்" என்றான்.

45 அவருடைய துன்பத்தின் மத்தியில் சரியாக மிகவும் இருட்டான வேளையில், சரியான அந்த கடுஞ்சோதனையான நேரத்தில் அப்பொழுது அந்த எலிகூ வந்து அவனுடன் பேசத் துவங்கினான்; அவனிடத்தில் அந்தப் பூ பாவம் செய்யவில்லை; அவன்தான் பாவம் செய்தவன் என்றும், அங்கே ஒரு உயிர்த்தெழுதல் உண்டாயிருக்கும் என்றும் கூறினான். "என்றோ ஒரு நாள் நீதியான ஒருவர் வருவார், இந்த உலகத்திற்கு ஒத்தவராய், தேவனுடைய சாயலின் ரூபத்தில், மனித சாயலில் உண்டு பண்ணப்பட்டவர். பாவத்தின் சாயலான மாம்ச ரூபத்தை தம்மேல் எடுத்துக் கொண்டார், வேறு வழியில் கூறினால், கோபமான பரிசுத்த தேவனுக்கும், ஒரு

பாவமுள்ள மனிதனுக்கும் இடையே நின்று அவருடைய கரத்தை இருவர் மேலும் வைத்து வழியை இணைத்து வைப்பார்" என்று கூறிக்கொண்டிருந்தான்.

46 யோபு அதைக் கண்டபோது, அவன் கர்த்தருடைய உயிர்த்தெழுதலை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் அதைக் கண்டான். இப்பொழுது கவனியுங்கள். வேறு வார்த்தைகளில் கூறினால், யோபு இதைப் புரிந்து கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்தான். அதாவது, "ஒரு மனிதன் பூமியின் தூளுக்குப் போகும்போது, அவன் வெறுமனே கெட்டுப்போய் அழிந்து போகிறான். நான் அவனை கவனிக்கிறேன். அவன் திரும்ப எழுகின்றதே இல்லை. அவன் அப்படியே கிடந்து தன் ஆவியை விடுகிறான். அவன் தூரப்போய்விடுகிறான், அவன் எங்கே இருக்கிறான்? அவன் எங்கே இருக்கிறான் என்று ஒருவனும் அறியான். ஆனால் மரித்தவனிடத்திலிருந்து மற்ற காரியங்கள்

எழும்புகின்றதை நான் கவனிக்கிறேன். ஆனால் அவன் எழுவதில்லை என்பதை நான் அறிவேன்” என்றான்.

47 அப்பொழுது இந்த தீர்க்கதரிசி ஆவிக்குள்ளானபோது என்ன சம்பவிக்கப்போவதாக இருந்தது என்பதை தேவன் அவனுக்கு காண்பிக்கத் துவங்கினார். அதாவது அங்கே யாரோ ஒருவர் இருப்பார் என்றும், அவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்ப்பார் என்றும், மீண்டும் உயிர்த்தெழுவார் என்பதுமேயாகும். அவன் கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக் கண்டான். ஆகையால், நான் நினைக்கும் பொழுது, நான் அதை நேசிக்கிறேன். அவன் எழும்பி நின்றதாக அவன் கூறினான். அவன் தன்னைத்தானே உதறிக் கொண்டான்.

48 அவன் ஒரு சாம்பல் மேட்டின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தான். என்னே! அவனுடைய வீட்டை கெட்ட யோகம்

தாக்கியிருந்தது என்று இன்றைக்கு நாம் அழைக்கிறோம். அவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கொல்லப்பட்டனர். அவனுடைய ஆஸ்தி முழுவதும் போய்விட்டது. அவனுடைய ஆரோக்கியம் சீரழிந்தது. அவன் ஒரு கிறிஸ்தவனாக அல்லது ஒரு விசுவாசியாக, கைவிடப்பட்டவனாய் உட்கார்ந்திருந்தான். மனிதன், அவனுடைய சபையும் கூட அவனைத் தள்ளிவிட்டு, அதனுடைய முதுகை அவனுக்குக் காட்டியது. அவன் அங்கே உட்கார்ந்துகொண்டு, அவனுடைய கொப்பளங்களை தேய்த்துக் கொண்டிருந்தான்.

49 பின்னர் கர்த்தருடைய ஆவி அவன் மேல் வந்தபோது, அவன் உயிர்த்தெழுதலை அந்த காலையில் கண்டான். உங்களுக்குத் தெரியும், அவன் எழும்பி நின்று அவன், “என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர்

கடைசிநாட்களில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல்முதலானவை அழுகிப் போனபின்பு, அவரை நானே பார்ப்பேன்... ” என்றான். கடைசி நாட்களில் அவரை அவன் காண்பான் என்றும், ஏனென்றால் ஒரு உயிர்த்தெழுதல், ஒரு பொதுவான உயிர்த்தெழுதல் உண்டாயிருக்கும் என்பதையும் அவன் அறிந்திருந்தான்.

# 53-0405S – போய் என் சீஷர்களுக்குச் சொல்லுங்கள்

Rev. William Marrion Branham

**சகோ. பிரன்ஹாம்:**

இன்னும் ஒரு நாள் அதைத் தள்ளிப் போட வேண்டாம். எடுத்துக் கொள்ளப்படுதலில் போவதிலிருந்து உங்களை தடை செய்கிற ஏதாவது காரியம் உங்களுக்கும் தேவனுக்குமிடையே இருக்குமானால், நீங்கள் இப்பொழுதே அதைச் சரிசெய்வது நல்லது.

செய்தி: *தீவிரமாய் வந்து அங்கே ஓடித் தப்பித்துக்கொள்*

~~~~~~~~~~~~

**Don't put it off one more day. If there's anything between you and God to keep you from going in the rapture, you better make it right now.**

ESCAPE.HITHER.COME.QUICKLY_ WATERLOO.IA SUNDAY_ 58-0202
~~~~~~~~~~~~

# நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களோ அல்லது இல்லையோ என்பதை நிச்சயமாக நீங்கள் அறியாதிருக்கும் போது எப்படி நீங்கள் மரணத்தை சந்திக்கச் செல்லுவீர்கள்?

**Bro.Branham**




சகோதரனே, கவலைப்பட வேண்டாம். புறஜாதிகளே, உங்களுடைய நாட்கள் சற்றேறக்குறைய முடிந்து விட்டன. நான் உங்களை கர்த்தருடைய நாமத்தில் எச்சரிக்கட்டும்: நான் இங்கே நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக புறஜாதி கதவு அடைப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

*செய்தி: மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும், பாகம் - 2, 61-0217, பத்தி எண் 49*

**Bro. Branham:**

காலை வருவதற்கு முன்பாகவே, நாம் தூள் தூளாகிப் போய், நியாயத்தீர்ப்பு இருக்கக் கூடுமானால், சபையானது வீட்டிற்குப் போவதைக் குறித்து என்ன? அது எந்த நிமிடத்திலும் வரலாம். நிச்சயமாக. ஓ, ஜனங்களே, விழித்துக் கொண்டு, வார்த்தையை வாசிப்பதின் மூலம் உங்களுக்குள்ளிருக்கும் உங்கள் ஆவிக்குரிய ஆத்துமாவை அசைத்துக் கொள்ளுங்கள். நாம் முடிவில் இருக்கிறோம். காலம் சமீபமாயுள்ளது.

~~~~~~~

**செய்தி:** 58-05-28 மேசியாவின் அடையாளம்
~~~~~~~

நதிக்கு அப்பால் ஓர் தேசமுண்டு,

அது எப்போதும் இனிமையானது என்கின்றனர்

விசுவாசத்தினால் மாத்திரமே அதன் கரைகளை நாம் சென்றடைய முடியும்.

அங்கேயுள்ள அழிவில்லாதவரோடு நாம் வாழ்ந்திட

நாம் ஒருவர் ஒருவராய் அந்நுழைவாயிலில் நாம் போய்ச் சேர்வோம்.

என்றாவது ஒரு நாள் உனக்காகவும் எனக்காகவும்

அவர்கள் அந்த பொன் மணியோசையை தொனிப்பர்.

~~~~~~~~~~~~

**There is a Land beyond the river,**

**That they call the sweet forever,**

**And we only reach that shore by faith decree;**

**One by one we gain the portal,**

**There to dwell with the immortal,**

**Someday they'll ring those golden bells for you and me.**

Rev William Branham
~~~~~~~~~~~~

# கடைசி வார்த்தைகள்

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து